DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண். 229/2021**

**அ.சா.–2**

| | |
|---|---|
| பெயர் : திருமதி. நிகிதா | கிராமம்: நாழிக்கல்பட்டி |
| க/பெ. : திரு. தினேஷ் | தாலூக்கா : சேலம் |
| வயது :23 | தொழில்: கூலி |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 44 of 1969, this the 14th day of July, 2025.

( 2 முதல் 4 எதிரிகள் ஆஜர். ( எதிரிகளின் வழக்குரைஞர் ஆஜர் )

**முதல்விசாரணை**:–

நான் மல்லூரில் வசித்து வருகிறேன். செங்கல் சூளையில் கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும், இவ்வழக்கில் கொலை செய்யப்பட்ட திலிப்குமார் என் அண்ணன் ஆவார் . கடந்த 6 வருடத்திற்கு முன்பு எனது வீட்டில் நான் டிவி பார்த்து கொண்டிருந்தேன். ஒரு நாள் எனது அண்ணன் வெளியே செல்வதாக சொல்லிவிட்டு சென்றார். என் தாயார் பாத்ரூம் சென்றுவிட்டு வெளியில் வந்து பார்த்தபோது செங்கல் சூயைில் கொட்டிகிடந்த செங்கல்கற்களுக்கு அருகில் ஒரு நபர் கிடப்பதைப்பார்த்தார். அதனால் அவர் அருகில் சென்று பார்த்தபோது எனது அண்ணன் பேச்சு மூச்சுயின்றி கிடந்தார். அவரது நெஞ்சிலும், வயிற்றின் அல்லையிலும் காயங்களுடன் கிடந்தார். அதனால் நாங்கள் ஆட்டோவை பிடித்து கொண்டு எனது அண்ணனை சேலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தோம். நானும், எனது தகப்பனார் மற்றும் தாயாரும் ஆட்டோவில் எனது அண்ணனுடன் மருத்துவமனைக்கு சென்றோம்.

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

மருத்துவமனைக்கு வந்தவுடன் எனது அண்ணனை பரிசோதித்த மருத்துவர் அவர் வரும்போதே இறந்துவிட்டார் என்று தெரிவித்தார். என் அண்ணனை யார் கொலை செய்தார்கள் என்றும், என்ன காரணத்திற்காக கொலை செய்தார்கள் என்பதும் எனக்கு தெரியவில்லை. என் அண்ணன் எதற்காக கொலை செய்யப்பட்டார் என்பதை பின்னிட்டும் எனக்கு தெரியவில்லை. எனது அண்ணனை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது போலிசார் மருத்துவமனைக்கு வந்து விசாரித்தார்கள். போலிசார் என்னை விசாரிக்கவில்லை. போலிசார் என்னை எப்போதும் விசாரிக்கவில்லை. என்னிடம் ஒரு வெள்ளைதாளில் கையொப்பம் மட்டும் வாங்கினார்கள்.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கேட்டு, அனுமதிக்கப்பட்டது.)

**குறுக்குவிசாரணை(அரசு தரப்பில்):–**

நான் போலிசார் விசரணையில் நாழிக்கல்பட்டி, காந்திநகரில் வசித்து வருவதாகவும், இளையபாரதம் நண்பர்கள் குழு எங்கள் பகுதியில் செயல் பட்டு வருவதாகவும், அந்த குழுவில் என் அண்ணனும், ஆரம்பத்தில் ஒரு உறுப்பினராக இருந்தார் எனவும், பின்னிட்டு என் அண்ணன் தனியாகவும், எதிரிகள் தனியாகவும் பிரிந்து எங்கள் பகுதியில் உள்ள விநாயகர் கோவிலில் விநாயகர் சிலை வைத்து விநாயகர் சதுர்த்தியை தனித்தனியாக கொண்டாடினார்கள் என்றும், 04.09.2019 அன்று காலை 10 மணியளவில் எதிரிகள் தரப்பினரும், எனது அண்ணன் தரப்பினரும் விநாயகர் சிலை கரைப்பதற்காக தனித்தனியாக எடுத்துக்கொண்டு மேட்டூர் நோக்கி வரும்போது எங்கள் ஊர் அம்பேத்கர் நகர் மூலக்கடை அருகே இருதரப்பினரும் ஒரே இடத்திற்கு வந்ததால் ஒருவரை பார்த்து ஒருவர் பேசிக்கொண்டதில் தகராறு ஏற்பட்டது என்றும், 1ம் எதிரியை பார்த்து எனது

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

அண்ணன் கை நீட்டி பேசி தகராறு செய்துள்ளார் என்றும், அதனால் 1ம் எதிரியின் தரப்பினர் இவ்வாறு நடந்துகொண்டால் எனது அண்ணனை கொன்றுவிடுவேன் என்று மிரட்டினார்கள் என்றும், எதிரிகள் 4ம் எதிரி கோகுல்ராசுக்கு வேண்டியவர்கள் என்றும், அவர் தலைமையில் தான் வந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தார்கள் என்றும், 05.09.2019 அன்று மாலை 6 மணியளவில் நானும், என் மாமன் மகன் சரண்குமாரும், எனது தாயாரும், எனது உறவினர் கனிமொழி மற்றும் எனது அண்ணனுடன் பேசிக் கொண்டிருந்தபோது அங்கே வந்த இவ்வழக்கு எதிரிகள் 4 நபர்களும், மற்றும் 2 இளவர்களும், எனது அண்ணனை பார்த்து எங்களைப் பார்த்தா டான்ஸ் ஆடுகிறாய், உன்னை தொலைத்துவிடுகிறோம் என்று மிரட்டிய போது எனது தாயார் குறுக்கிட்டு நான் பார்த்து கொள்கிறேன் என்று கூறி சமாதானம் பேசியதாகவும், பின்பு அங்கிருந்து சென்றுவிட்டு இரவு சுமார் 7.30 மணியளவில் எனது அண்ணன் மற்றும் எனது மாமன் மகன் அருகில் உள்ள சுரேஷ்குமார் என்பவர் வீட்டில் பேசிக்கொண்டிருந்தபோது 1ம் எதிரி எனது அண்ணனை கையால் அடித்தார் என்றும், அதை தடுக்க வந்த சரண்குமாரை இளவர் சரவணன் சூரி கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் மேற்படி சரண்குமாருக்கு தலை, நெற்றி மற்றும் சுண்டுவிரல் ஆகியவற்றில் காயம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனை பார்த்து நானும், எனது தகப்பனாரும், எனது தாயாரும் தடுத்தோம் என்றும், எனது தகப்பனாரை 1ம் எதிரி எட்டி உதைத்து கிழே தள்ளினார் என்றும், எனது தாயாரை 1ம் எதிரி கிழே தள்ளி அவர் வைத்திருந்த கத்தியால் வெட்டினார் என்றும், அதனால் என் தாயாருக்கு வலது முழங்கையில் காயம் ஏற்பட்டது என்றும், 2 மற்றும் 3ம் எதிரிகள் எனது தாயாரையும், எனது தகப்பனாரையும், என் அண்ணனை காப்பாற்றிவிட கூடாது என்று பிடித்து கொண்டார்கள் என்றும், அப்போது 4ம் எதிரி ஒன்றும் நடக்காது என்று கூறி எங்களை வஞ்சகமாக ஏமாற்றி எங்கள் வீட்டிற்கு

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

கொண்டுவந்து விட்டுவிட்டார்கள் என்றும், ஆனால் எனது தாயார், எனது அண்ணனை மீட்பதற்காக மீண்டும் அங்கே சென்றபோது 1ம் எதிரி எனது அண்ணனை சூரிகத்தியால் இடதுபக்க அல்லையில் குத்தினார் என்றும், இளவர் சரணவன் எனது அண்ணனின் வலது கால் முட்டியில் சூரிகத்தியால் வெட்டினார் என்றும், 2 மற்றும் 3 எதிரிகள் அதனை தடை செய்யாமல் வேடிக்கை பார்த்து கொண்டிருந்தார்கள் என்றும், மேற்படி சம்பவத்தில் 2 மற்றும் 3 எதிரிகளுக்கு சம்மந்தம் உள்ளது என்றும் காயம்பட்ட எனது அண்ணன் ரத்தம் சொட்டசொட்ட அருகிலுள்ள அழகு என்கிற சுரேஷ்குமார் வீட்டிற்குள் சென்று ஒளிந்து கொண்டார் என்றும், இதனை பார்த்த அருகிலுள்ள ரவிச்சந்திரன் மகன் கௌதம், கனிமொழி , என் மாமன் மகன் கௌதம், ஆகியோர்கள் ஏன்டா திலீப்குமாரை வெட்டினீர்கள் என்று கேட்டபோது அவர்கள் கையில் வைத்திருந்த கத்தியை காட்டி அருகில் யாரும் வந்தால் உங்களையும் வெட்டிவிடுவோம் என்று எங்களையும் மிரட்டினார்கள் என்றும், பின்னர் அங்கிருந்து 1ம் எதிரியும், இரண்டு இளவர்களும் ஓடிவிட்டார்கள் என்றும், அவர்களை தொடர்ந்து 2 மற்றும் 3 ம் எதிரிகளும் ஓடிவிட்டார்கள் என்றும், காயம்பட்ட எனது தாயாரும், எனது அண்ணனும், எனது மாமன் மகன் சரண்குமாரும், 108 ஆம்புலன்ஸ் மூலம் சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தோம். எனது அண்ணன் இறந்துவிட்டதால் அவரது உடலை சவகிடங்கிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றும், எனது தாயாரும், சரண்குமாரும் உள்நோயாளியாக சிகிச்சைக்கு சேர்ந்தார்கள் என்றும், மல்லூர் போலிசார் சேலம் அரசு மருத்துவமனைக்கு வந்து எங்களை விசாரித்தபோது எனது அண்ணனை கொலை செய்த எதிரிகளின் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று புகார் வாக்குமூலம் எனது தாயார் கொடுத்தார் என்றும், போலிசார் உரிய நடவடிக்கை எடுத்து எதிரிகளை கைது செய்ய வேண்டும் என்று தெரிவித்து மாவட்ட ஆட்சியர்

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.

அலுவலகத்தின் முன்பு ஆர்ப்பாட்டம் நாங்கள் செய்தோம் என்றும், அதன் காரணமாக எங்கள் குடும்பத்தினருக்கு பாதுகாப்பு வழங்கும் பொருட்டு ஒருமாதகாலம் போலிசார் எங்கள் வீட்டினருகில் காவல்பணியில் ஈடுபட்டார்கள் என்றும், மீண்டும் 13.09.2019 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார் என்றும், அப்போது வழக்கு சங்கதிகளை நான் அவரிடம் தெரிவித்தேன் என்றும், அதில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் தான் உண்மை என்றும் தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மைக்கு புறம்பாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் 1ம் எதிரி வெட்டி கொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற காரணத்தினால் தான் எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால்சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை</u> (2 மற்றும் 3 எதிரி தரப்பில் )

இல்லை

**<u>குறுக்குவிசாரணை</u>** (4 எதிரி தரப்பில் )

இல்லை

Sd./- R. Velaras,
I Additional District Judge,
Salem.